1972 ஏப்ரல் 6]

Koilpatti Water Supply Schemes

*892 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether the Tamil Nadu Water Supply and Drainage Board has purchased large quantities of Hume steel specials for the Kovilpatti Water Supply Scheme, during 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) மதுரை, தமிழ்நாடு நீர் வழங்கல்-வடிகால் வாரியத்தின் செயலாக்கப் பிரிவின் மேற்பார்வைப் பொறியாளர், 1971 டிசம்பரில் கோவில்பட்டி நீர் வழங்கு திட்டத்திற்குத் தேவைப்படும் ஹியூம் சிறப்பு உருக்குகளை வழங்குவதற்காக சென்னை, திருவாளர்கள் இந்தியன் ஹியூம் குழாய்கள் கம்பெனிக்கு பணி ஆணைகளை அனுப்பியுள்ளார். இக் குழாய்களின் மொத்த மதிப்பு ரூ. 2,33,300.

மாலைநேரக் கல்லூரிகளில் பயிலும் அரிசன மாணவர்கள்

* 893 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மாலைநேரக் கல்லூரியில் படிக்கும் பின்தங்கிய வகுப்பினர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆகியவர்களுக்கு Tuition Fees-ல் சலுகை காட்டப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்

*** 894 வினா— திரு. வீ. கார்த்திகேசன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாவது சம்பள கமிஷன் சிபாரிசின் பேரில் ஓய்வு பெற்ற என்.ஜி.ஓ.-க்களுக்குக் கொடுக்கப்பட்ட ஓய்வு ஊதிய உயர்வு, ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?